RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22473

OPEN ACCESS

# தேவாரத்தில் அன்பே அருள் நெறி

ம. புகழேந்திர சோழன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பயோனியர் குமாரசுவாமிக் கல்லூரி, நாகர்கோவில்-629003, தமிழ்நாடு, இந்தியா

# Love is the Path of Grace in Thevaram

M. Pugazhendra Chozhan [a, *]

[a] Department of Tamil, Pioneer Kumaraswamy College, Nagercoil-629003, Tamil Nadu, India

* Corresponding Author: pugazhcho@gmail.com

Received: 25-06-2022
Revised: 06-09-2022
Accepted: 18-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Love is the only thing that rules mankind. Love can subjugate and rule all people. There is no one in this world who is not bound by love. Everyone's happiness lies in love. God can be seen only through love. Thevaram means love to God and devotion to God, 'The' means deity and 'Varam' means love. So Thevaram is the love of God. It can be said that it is in the sense of love for God. Thevaram and Moovar Thevaram are the compositions of three Nayanmars – Thirugnana Sambandar, Thirunavukkarasar and Sundaramoorthy Nayanar. The period of the Thevaram compilation was A.D. It is the tenth century. It was compiled by Nambiandar Nambi. He has compiled all the devotional songs of Saivism into eleven Thirumurai. Thirugnana Sambandar's songs as the first three Thirumurai, Thirunavukkarasar as the second three Thirumurai, Sundaramoor; He has compiled the songs as a Thirumurai and compiled them into three Thevarams. The purpose of this article is to explain through the Moovar Thevaram that the perfect grace of God comes only when one loves others.

**Keywords:** Thevaram, Nambiyandar Nambi, Nayanmars, Grace

## முன்னுரை

மனித குலத்தை அன்பு என்ற ஒன்று தான் ஆள்கிறது. அன்பினால் அனைத்து மக்களையும் அடக்கி ஆள முடியும். அன்புக்கு கட்டுப்படாதவர்கள் இவ்வுலகில் யாரும் இல்லை என்றே கூறலாம். அன்பில் தான் அனைவரின் மகிழ்ச்சியும் உள்ளது எனலாம். அன்பின் மூலமே இறைவனைக் காண முடியும். பிறர் மீது அன்பு செலுத்துகின்ற பொழுதே இறைவனின் பரிபூரணமான அருள் கிடைக்கும் என்பதனை மூவர் தேவாரம் வழி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

## தேவாரம் அன்பு

தேவாரம் என்றாலே இறைவன் மீது அன்பு செலுத்துதல் என்றும் தெய்வ பக்தி என்றும் பொருள்படும் அதாவது 'தே' என்றால் தெய்வம், 'வாரம்' என்றால் அன்பு என்று பொருள்படும். எனவே தேவாரம் என்பது தெய்வ அன்பு. தெய்வத்தின் மீது கொண்ட அன்பு என்ற பொருளிலே அமைகிறது என்று கூறலாம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி நாயனார் ஆகிய மூன்று நாயன்மார்களின் பாடல் தொகுப்பே தேவாரம் என்றும் மூவர் தேவாரம் என்றும் அழைக்கப்படுகிறது. தேவாரத் தொகுப்பு ஏற்பட்ட காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு ஆகும். இதனைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவர். இவர் சைவ சமய பக்திப்பாடல்களையெல்லாம் பதினொரு திருமுறைகளாகத் தொகுத்துள்ளார். திருஞான சம்பந்தர் பாடல்களை முதல் மூன்று

திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடல்களை இரண்டாவது மூன்று திருமுறைகளாகவும், சுந்தர மூர்த்தி பாடல்களை ஒரு திருமுறையாகவும் சேர்த்துத் மூவர் தேவாரமாக தொகுத்துள்ளார்.

## அன்பு நெறி

மனித வாழ்வில் அன்பே அனைத்திற்கும் முதன்மையானதாக கருதப்படுகிறது. அந்த அன்பினை யாரும் அடைத்து வைக்க முடியாது.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புண்கணீர் பூசல் தரும்" (Varadharasan, 2004)

உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பத்தை காணுமிடத்து கண்ணீர்துளி வாயிலாக அது வெளிப்படுகிறது என்ற திருவள்ளுவரின் வரிகள் மூலம் அன்பினை யாரும் மனதிற்குள் பூட்டி வைக்க முடியாது என்பதனையும் அன்பு நெறி என்பது வெளிப்பட்டே தீPரும் என்பதனையும் உணரலாம். அது போலவே பக்தி இலக்கிய காலத்தில் வாழ்ந்த சைவ பெரியார்களும் அன்பு நெறி வாயிலாகவே இறைவனின் அன்பையும், அருளையும் பெற முடியும் என்கின்றார்கள். இக்கருத்தை பின்வருமாறு காணலாம்.

## அன்பில்லாரிடம் இறைவன் இல்லை

இறைவன் அன்புருவானவன், உண்மையே உருவாக இருப்பவன். இறைவனை அன்பினால் தான் ஆட்கொள்ள முடியும். அன்பு இல்லாதவரிடம் ஒருநாளும் அவன் இருப்பதுமில்லை அருள் செய்வதுமில்லை என்பதினைப் பின்வரும் திருஞானசம்பந்தர் பாடல்வழி அறியலாம்.

'அருந்தானை அன்பு செய்து ஏந்த இயலார்பால்

பொருந்தானைப் பொய் அடிமைத் தொழில் செய்வாரள்

விழுந்தானை வேதியர் ஓதி மிடை காழி

இருந்தானை ஏத்துமின் ! நும்வினை ஏகவே' (Ramasupiramaniyan, 1998)

"யாராலும் எளிதிலே காண்பதற்கு அரிதாக இருக்கின்றவனை உள்ளத்தால் அன்பு செய்து போற்றாதவர்கள் பால் பொருந்தாமல் இருப்பவனை உள்ளத்திலே அன்பும் உண்மையும் இல்லாமல் பொய்யாக அடிமைத் தொழில் செய்கின்றவர்களிடம் காணற்கு அரிய விருந்தாக இருப்பவனை, வேதங்களை நன்றாக ஓதியவர்கள் என்றும் பெயர் சொல்லி வணங்குவதற்குக் கூடியிருக்கும் சீகாழியிலே இருக்கின்ற சிவபெருமானை நும் தீவினை போக வேண்டுமானால் போற்றுங்கள்" என்ற திருஞானசம்பந்தர் செய்யுள் வழி அன்பில்லாரிடம் இறைவன் இல்லை. பொய்யாக நடித்து வாழ்பவர்களிடமும் இறைவன் இருப்பதில்லை என்ற கருத்தமைந்திருப்பதைக் அறியலாம் (chidambaranar, 2001).

## இரக்கமில்லா நெஞ்சில் இல்லாதவன்

அன்பில்லாதவர்களின் நெஞ்சிலும் இரக்கம் இல்லாதவர்களின் நெஞ்சிலும் இறைவன் இருக்கமாட்டான் எனும் கருத்தைத் திருஞானசம்பந்தர் பின்வரும் பாடல்வழி உணர்;த்துகின்றார்.

"நெதியானை நெஞ்சு இடம் கொள்ள நினைவார்தம்

வதியானை விண்ணவர்தாம் வியந்து ஏந்திய

கதியானை கார் உலவும் பொழில் காழியாம்

பதியானைப் பாடுமின் நும் வினை பாறு அறவே" (Ramasupiramaniyan, 1998)

“எல்லாச் செல்வங்களுமாக இருக்கின்றவனை எப்பொழுதும் மறவாமல் தன் மனத்திலே வைத்திருப்பவர்களின் விதியாக நின்று அவர்கள் வாழ்வுக்கு வழிகாட்டுகின்றவனை, தேவர்கள் அனைவரும் வியந்து போற்றும் உயர்ந்த கருவியாக இருக்கின்ற இறைவனை, மேகங்கள் தவழ்கின்ற சோலைகள் நிறைந்த சீகாழியாகிய திருப்பதியிலே உள்ளவனைப் பாடுங்கள்; உமது தீவினைச் சிதறி ஒடும்படி உள்ளன்புடன் பாடுங்களு” என்கிறார் ஞானசம்பந்தர் (chidambaranar, 2001). “நெஞ்சு இடம் கொள்ள நினைவார்தம் விதியானை” என்ற தொடர் மூலம் இரக்கமில்லாதவரின் நெஞ்சில் இறைவன் இருப்பதில்லை என்ற கருத்தினைத் திருஞானசம்பந்தர் புலப்படுத்துகின்றார் எனலாம்.

## அன்பனாக இன்பனாக இறைவன்

இன்பத்தையும் அமைதியையும் அடைய விரும்புகிறவர்கள் பிறர்மீது அன்பு காட்டுவது அவசியமாகும். அப்படி அன்பு செய்கின்றவர்களிடத்தில் இறைவன் அனைத்துமாய் நின்று அருள் செய்வான் என்றே கூறலாம்.

துன்பம் இன்றித் துயர் ரின்றி என்றும்நீர்

இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்!

என்பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்க்கு

அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே. (Ramasupiramaniyan, 1998)

என்ற திருநாவுக்கரசரின் பாடல்வழி “துன்பம் இல்லாமல் கவலையில்லாமல், எப்பொழுதும் நீங்கள் இன்பத்தை பெறுவதற்கு, இரவும் பகலும் இடைவிடாமல் இறைவனை ஏத்துங்கள். என்னுடைய செல்வமே ஈசன் தான், எல்லாமே அவன் தான் என்று நினைப்பவருக்குத் திருவானைக்காவில் உள்ள அவ்விறைவன் அன்பனாக ஆய்விடுவான்” என்பதே இச்செய்யுளின் பொருளாகும் (chidambaranar, 2001). மேற்கண்டவாறு மனிதர்கள் இன்பம் அடைய அன்பு செய்வதே சிறந்த நெறியென்று திருநாவுக்கரசர் கூறும் கருத்தின் வழி அறியலாம்.

## வஞ்சனையற்றவர் உள்ளதில் இறைவன்

உள்ளத்திலே வஞ்சகம் இல்லாமல் பிறர்மீது அன்பு செலுத்துகின்றவர்களிடத்தில் இறைவன் வாழ்வான். வஞ்சகம் இல்லா மனமே அன்பு நெறி கொண்ட மனமாகும்.

வஞ்சகம் இன்றி வணங்குமின். வைகலும்

வெஞ்சொல் இன்றி விலகுமின், வீடு அற

நைஞ்சு நைஞ்சு நின்று உள் குளிவார்க்கு எலாம்

அஞ்சல் என்றிடும் ஆனைக்கா அண்ணலே. (Ramasupiramaniyan, 1998)

இது திருவானைக்காத் திருக்குறுந்தொகையில் உள்ள பாடலாகும். இப்பாடலில் திருநாவுக்கரசர் கூறுவன யாதெனில், “தினந்தோறும் உள்ளத்;திலே வஞ்சனையற்று இறைவனை வணங்குங்கள். கொடுஞ்சொல் கூற வேண்டாம். கொடிய சொற்களைப் பேசுவதை அடியொடு விட்டுவிடுங்கள். உலக பாசமாகிய குற்றம் நீங்க வேண்டிய மனம் நைந்து நைந்து நின்று உள்ளம் குளிர்;ந்து அன்பு செய்கின்றவர்களுக்கெல்லாம் ஆணைக்கா அண்ணல் அஞ்சவேண்டாம் என்று சொல்லி அருள் புரிவான” என நாவுக்கரசர் கூறுகிறார் (chidambaranar, 2001). அதாவது வஞ்சனையில்லாமல் அன்பு நெறியில் வாழ்கின்றவரின் நெஞ்சிலே இறைவன் வாழ்வான் என்ற கருத்தியலை திருநாவுக்கரசர் தம் செய்யுள் வழி விளக்குவதைக் காணலாம்.

## அன்பே அறநெறிக்கு வழி

அன்புள்ளவர்களே அறநெறியை பின்பற்றி வாழ்வார்கள். அன்பில்லாதவர்கள் அறநெறியைப் பின்பற்ற மாட்டார்கள். அன்புள்ளவர்களே மனித சமுதாயம் முன்னேருவதற்கு உழைப்பார்கள். அன்பில்லாதவர்கள் மனித சமுதாயத்தைப் பற்றி கவலைப்படமாட்டார்கள். அன்பு இருந்தால் தான் அறநெறியுடன் வாழமுடியும் என்ற கருத்தியலை திருநாவுக்கரசரின் செய்யுள் வழி அறியலாம்.

பற்றுலா வாழ்க்கை வாழ்ந்து

பாழுக்கே நீர் இறைத்தேன்

உற்றுலால் கயவர் தேறார்

என்னும் கட்டுரையோடு ஒத்தேன்

ஏற்று உளேன் என் செய்கேன் நான்

இடும்பையால் ஞானம் ஏதும்

கற்றிலேன்; களைகண் காணேன்

கடவூர் வீரட்டனாரே. (Ramasupiramaniyan, 1998)

எனும் திருக்கடவூர் பதிகத்தின் வழி "உலகில் உள்ளோர் அன்பற்ற வாழ்க்கை வாழ்ந்து வீணுக்கு அல்லது விழலுக்கு நீர் இறைத்தேன். துன்பம் உற்றால் அல்லாமல் கயவர்கள் தீமையின் பலனை அறியமாட்டார்கள் என்னும் பழமொழிக்கே இலக்கானேன். இவ்வாறு உள்ளேன் நான் என்ன செய்வேன், நான்படும் துன்பத்தால் ஓய்வு ஒழிவு இல்லாத தொல்லையால், அறிவுரைகள் ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் போனேன" திருக்கடவூர் வீரட்டானத்தில் வாழும் இறைவனே! எனக்கு ஆதரவாயிருப்பார் யாரையும் காண்கிலேன் என்கிறார் (chidambaranar, 2001).

மேற்கண்ட செய்யுளின் வழி திருநாவுக்கரசர் கூறுவது மக்கள் அனைவரும் அன்புள்ளங்கொண்டு வாழ வேண்டும். அந்த அன்புதான் எல்லா உயிர்களிடத்தும் இரக்கத்தை செலுத்தும். தீமை தரும் செயல்களைச் செய்யக்கூடாது. இது அறநெறிக்கு புறம்பானது ஆகும். ஆகையால் அனைவரிடத்தும் அன்பு செலுத்துங்கள் அன்பே அறநெறிக்கு வழி என்று நாவுக்கரசர் தம் பாடல் வழி புலப்படுத்துவதைக் காணலாம்.

## முடிவுரை

அன்புருவானவன் இறைவன். அவ்இறைவன் மனித மனத்தில் வாழ்வானாயின் அவர்களை அன்பு செய்கின்றவர்களாகவும், அறநெறியைக் கடை பிடிப்பவர்களாகவும் தான் வாழச் செய்வான். எனவே பிறரிடத்தில் அன்பு செய்கின்றவர்களே இறைவனின் அருளைப் பெற்றவர்களாக கருதலாம். இத்தகைய அன்பை அடிப்படையாகக் கொண்டது தான் 'நம் தமிழ் சமூகத்தின் அருள்நெறி அறநெறி' ஆகும் என்பதனைக் இக்கட்டுரையின் வழி அறியலாம்.

## References


Chidambaranar, S. (2001) Devara Arul Mozhikkanikal, Valmpuri Pathipagam, Chennai, India

Ramasupiramaniyan, V.T. (1998) Panniru Thirumuraikal (Devaram) Vol-4, Tamil Nilayam, Chennai, India

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License